**பானதுற பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதனச் செலவினம் ரூபா 2,125,359 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் அதனை ரூபா 2,116,369 ஆகக் குறிப்பிட்டமையால் முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதனச் செலவினம் ரூபா 8,900 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 300,000 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மூலதனச் செலவினத்திலிடப்படாது மீண்டுவருஞ் செலவினமாகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டினது மீண்டுவருஞ்

செலவினம் ரூபா 300,000 அதிகரித்தும் மூலதனச் செலவினம் ரூபா 300,000 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 2,285,419 தொடர்பாகக் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான கடன் கொடுத்தோரும் ஆண்டிற்கான செலவினமும் ரூபா 2,285,419 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் பொருட்டு சபைக்குரிய சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குவதற்குக் கேள்வி கோரல்களைப் பிரசுரிப்பதற்குச் செலவாகிய ரூபா 365,670 மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டதால் மீண்டுவருஞ் செலவினம் ரூபா 365,670 குறைவாகவும் மூலதனச் செலவினம் ரூபா 365,670 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின்போது ரூபா 24,772 கொடுப்பனவு செய்யப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்ட 03 நாற்காலிகள் ரூபா 247,720 ஆக மூலதனமாக்கப்பட்டதால் தளபாடங்களும் உபகரணங்களும் மற்றும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கும் ரூபா 222,948 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் போது மூலதன உதவியாகப் பெறப்பட்டது ரூபா 17,031,760 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் அதனை 16,031,810 ஆகக் காட்டியமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவிப் பெறுவனவு ரூபா 999,950 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் கையிருப்புப் பெறுமதி ரூபா 80,533 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 217,603 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கையிருப்பாகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டின் கையிருப்பு மீதி ரூபா 217,603 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 874,520 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் மற்றும் ரூபா 111,196 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் மூலதனமாக்கப்படாததால் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் கணக்கு மற்றும் தளபாடங்களும் உபகரணங்களும் கணக்கு என்பன முறையே ரூபா 874,520 மற்றும் ரூபா 111,196 என்பவற்றால்

குறைத்தும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு ரூபா 985,716 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டினது இறுதியில் உள்ளவாறான நிலையான வைப்பு முதலீடு ரூபா 90,627,828 ஆகும். இது ரூபா 90,576,828 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 51,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 86,631,153 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 85,717,536 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 74,790,834 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,926,702 அதிகரிப்பு தென்பட்டது.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------------------------ | -------------------- | --------------------- | --------------------- |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 29,184 | 16,544 | 23,100 |
| (ii) | குத்தகை வாடகை | 3,068 | 2,540 | 3,672 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 404 | 404 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 6,274 | 5,509 | 765 |

### 2.2.2 தீர்வை வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான நிலுவை ரூபா 21,225,825 ஆகும். இந்நிலுவையில் ஆண்டின்போது 52 சதவீதமான ரூபா 11,094,615 அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டினது நிலுவையில் மேலும் ரூபா 10,131,210 மீதியானது தொடர்ந்தும் நிலுவையாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி ரூபா 26,558,409 ஆகும். ஆண்டின்போது இதில் 53 சதவீதமான ரூபா 14,014 அறவிடப்பட்டிருந்தது. தற்போது பட்டியலிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் இருந்த நிலுவை மீதி ரூபா 12,543,658 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த தீர்வை வரி நிலுவை ரூபா 22,674,868 ஆகும். ஒட்டுமொத்த அறவீட்டினது செயல் முன்னேற்றம் 53 சதவீதம் மாத்திரமே. இதற்கமைய, தீர்வை வரி வருவாயைச் சேகரிப்பதிலான செயல் முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.

(ஈ) ஒட்டுமொத்தத் தீர்வை வரி நிலுவை மீதியில் 16 சதவீதமான ரூபா 3,714,126 ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும். தீர்வை வரிக் கூறுகளின் எண்ணிக்கை 3533 ஆகும். ஒட்டுமொத்த நிலுவையின் 21 சதவீதமான ரூபா 4,744,182 மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தனவாகும். கூறுகளின் எண்ணிக்கை 4,807 ஆகும்.

**2.2.3 வர்த்தக மற்றும் வேலை வரி**

வேலை வரி மற்றும் வர்த்தக வரியைச் செலுத்த வேண்டியவர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் வரியை அறவிட வேண்டுமாயினும், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு வேலை வரியாக ரூபா 180,800 மற்றும் வர்த்தக வரியாக ரூபா 240,460 என்பன நிலுவை மீதிகளாக இருந்தன. அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

2.2.4 வர்த்தக நிலைய வாடகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 4,548,997 நிலுவையில் அறவிடப்பட்ட தொகை 31 சதவீதமான ரூபா 1,404,982 மாத்திரமே.

(ஆ) மீளாய்வாண்டில் வர்த்தக நிலையங்களுக்குப் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 3,068,035 ஆகும். ஆண்டின்போது இதில் அறவிடப்பட்ட தொகை 82.8 சதவீதமான ரூபா 2,540,420 மாத்திரமே.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 3,716,190 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 62,995,351 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) வாகனக் கட்டுப்பாடு

சபை மேற்கொண்ட வாகனக் கணிப்பின் பிரகாரம் சபையின் 49 வாகனங்களில் 06 வாகனங்கள் தற்போது சபையிடம் இல்லாதிருப்பது புலனாகியது.

(ஆ) சபைக்குரிய வீதிகள் பல்வேறு காரணங்களின் நிமித்தல் பழுதாக்கப்படும் போது அறவிடப்படும் வைப்புப் பணத்தில் அவ்வீதிகள் மீண்டும் செப்பனிடப்பட வேண்டுமாயினும், 2016 ஆம் ஆண்டில் அவ்வாறு பெறப்பட்ட ரூபா 2,109,238 எந்த வீதியையும் செப்பனிடப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அநேக முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் காணப்பட்டபோதும், சபை அத்தரிப்பிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கான உப விதிகளைத் தயாரித்து அதனைச் சட்டபூர்வமாக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 2 ஹோட்டல்களைத் தவிர வேறெந்த ஹோட்டலும் தனது இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. சமர்ப்பிக்கப்படும் வருவாய் மதிப்பீட்டினது அடிப்படையில் 1 சதவீத வரி கணிப்பிடப்படுவதால் சபைக்குக் கிடைக்க வேண்டிய வரி குறிப்பாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களின் எண்ணிக்கையை உறுதி செய்வதற்கான விதி முறைகளைச் சபை கடைப்பிடிக்காததால் வரி அறவிடப்பட வேண்டிய சகல நிறுவனங்களிலிருந்தும் வரி அறவிடப்பட்டதா என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

### 3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) 2016 ஆம் ஆண்டிற்கெனக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான கேள்விகளைக் கோரி, குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்திருந்த சுப்பர் கொம்போஸ்ட் நிறுவனத்திடமிருந்து ஒரு டிப்பருக்கு ரூபா 16,800 வீதம் வழங்குவதற்குத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு பரிந்துரை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஒரு டிப்பருக்கு ரூபா 21,000 எனக் குறிப்பிட்டிருந்த GFC மெஷினரீஸ் நிறுவனத்திடம் அவ்வேலை ஒப்படைக்கப்பட்டதால் சபைக்கு ரூபா 1,780,800 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) பானதுர பிரதேச சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக எதுவித நடைமுறைகளும் அமுலாக்கப்படாததால் 2015 யூன் முதல் 2016 டிசெம்பர் வரையான காலப்பகுதியின்போது கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குச் சபையின் வருவாயிலிருந்து ரூபா 10,332,000 தனியார் நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(உ) பாதீடு